# திருவாக்குப் புராணத்தின் வாழ்வியல்நெறிகள்

*முனைவர் ர. ஞானம்*
உதவி பேராசிரியர்
போப் கல்லூரி (தன்னாட்சி), சாயர்புரம்

மலர்: 11
சிறப்பிதழ்: 2
மாதம்: ஜூலை
வருடம்: 2023
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6421

விஞ்ஞான வளர்ச்சியும், நாகரீக வளர்ச்சியும், பொருளாதார முன்னேற்றம்கண்ட இவ்வுலகில்மக்கள்தங்கள்தனிமனிதவாழ்விலும் சமுதாய வாழ்விலும் மனம் போல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதற்கு மக்கள் தங்கள் தனிமனித மாண்புகளை மறந்து வாழ்தலை காரணமாக கொள்ளலாம். பண்டைய கால தமிழ் சமூகங்களும் இலக்கியங்களும் அறங்களை போதிக்கும் கருத்துப் பெட்டகங்களாக இருக்கின்றன. அதிலும் கிறித்தவ இலக்கியக்களில் அறக்கருத்துக்கள் மிகுந்து காணப்படுகிறது. அவற்றை வெளிப்படுத்தும் நோக்கோடு இக்கட்டுரை அமைகிறது.

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது வாழ்க்கை அல்ல இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே சிறந்த வாழ்க்கை. கிறித்தவவாழ்வு என்பது வளமோடும் ஒழுக்கத்துடனும் வாழக்கூடிய வாழ்வாகும். பல்வேறு வாழ்வியல் மதிப்பீடு உள்ளடக்கியதாகும். நற்பண்புகளையும் நற்செயற்களையும் வலியுறுத்தும் வாழ்வாகும். இதற்கு எடுத்துக்காட்டாக கனகசபைப் பிள்ளை எழுதிய திருவாக்குப் புராணத்திலுள்ள ஈசாக்குப் படலம் வாழ்வியல் நெறிகளை தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

## பெற்றோரைப் பேணுதல்

ஒவ்வொருவரும் தம்அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளுள் முதன்மையானது ஒழுக்கம் ஆகும். நமது பெற்றோரை மரியாதையுடன் நடத்த வேண்டும். “பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள். இது நியாயம்”[1] (எபேசி 6-1) என்று வேதாகமம் கூறுகிறது. ஒழுக்க நெறியில் சிறந்து விளங்குவோர் தமது பெற்றோரை கவனித்து மனமகிழ்வுடன் செயல்படுவர். எல்லா காரியங்களிலும் அதாவது பெற்றொர்க்கு கீழ்படிந்து நடக்க வேண்டும்

ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோசப்படுத்துகிறான். மூடத்தனம் உள்ளவனோ தாய்க்கு சஞ்சலமாயிருக்கிறான்[2]. (நீதி-10-1)

**“தாயிற் சிறந்த கோயில் இல்லை”**
**“தந்தை சொல் மிக்க மந்திரமில்லை”**

பெற்ற தாயினை விட சிறந்த கோயில் இல்லை என்றும் தந்தை சொல்கின்ற சொல்லை மந்திரமாக போற்றி வணங்க வேண்டும் என்று ஔவையார் கூறுகின்றார். இவ்வாறு வாழ்ந்தால் சமூகம் மதிக்க வாழமுடியும் என திருவாக்குப்புராணம் ஈசாக்கை எடுத்துக்காட்டாக கூறுகிறது.

**சீரிய வீசாக்கென்னுஞ் செவ்வியோன் வயதெண்ணைந்திற்**
**பாரினிற் சிறந்த செல்வப் பதானராம் நாடுதன்னில்**
**ஏரியல் சூரியாவி னிரேபேக்கா ளெனும்பேர் பெற்ற**
**நேரிழை தன்னை வேட்டு நீணில் மதிக்க வாழ்ந்தான்**

**(ஈசாக்குப் படலம்-1)**

**உயர்வறம்**

உண்மையாக இருத்தல், ஒழுக்கமாக வாழ்தல், அறநெறி தவறாதிருத்தல் ஆகிய உயர்ந்த கோட்பாடுகளை கிறித்தவ இலக்கியங்கள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் இன்றைய சமூகத்தில் நிலைமை சற்றுத் தலைகீழாக உள்ளது. உண்மை பேசினால் காசு வருமா?

ஒழுக்கமாக வாழ்ந்தால் யார் மதிக்கிறார்கள்? அறநெறி தவறாது வாழ்வதால் அடையப் போவது என்ன? ஒன்றும் இல்லை என்கின்ற நிலை வேகமாக மனித மனங்களைப் பற்றி வருகிறது. ஏனவே இன்றைய சமுதாயத்தில் குணம் செல்லாக் காசாகி வருகின்றது. அல்லாமலும் இவற்றிற்குப் புறம்பாக, மாறாக வாழ்பவர்கள். பொய் பேசுபவர்கள், ஒழுங்கு தவறி நடப்பவர்கள், அறநெறி மீறுபவர்கள் சமுதாயத்தில் மேனிலை பெற்று உயர்த்திருப்பதும், செல்வ வளத்தில் சிறந்திருப்பதும், பலரும் போற்றும் வாழ்க்கை வசதிகளைப் பெற்றிருப்பதும், ஒழுக்க நெறிகள் ஓம்பப்படாமல் உபசரிக்கப்படாமல் போனதற்கு ஒரு காரணம் ஆகும்.

இதற்குமாறாக வேதாகமம் நமக்கு கற்றுக்கொடுக்கும் பாடம் உலகம் எப்படி பாவச்சேற்றுக்குள் போனாலும் நாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்படிந்து நடப்போமானால் தேவன் பெரிய ஆசீவாதத்தை தருவார்.[3] ஆதி 26-4இ5

**உந்தையெனக்கமை வுற்றிடு கற்பனை யோடுமியான்**
**தந்தனவெப்பிர மாணமு மாதிக டவறாதே**
**வந்தொழு குற்றதி னாலுடுவிற்குல மல்கிடவும்**
**இந்தநிலம்முழு தன்னரெய்தவு மீவேனால்**

**(ஈசாக்குப் படலம்-18)**

**உற்றிடு நின்னுயர் சந்ததியாலிவ் வுலகெங்கும்**
**துற்றிடு சாதியர் யாவருமாகி துலக்கமுறப்**
**பெற்றிடு வாரென வோதினனெங்கள் பிரானீசாக்**
**கற்பொடு வைகின னங்குயர்கெரா ரணிநாட்டில்**

**(ஈசாக்குப் படலம்-19)**

ஈசாக்கின் தந்தை ஆபிரகாம் தேவனுக்கு கீழ்படிந்து கற்பனைகளை கைக்கொண்டபடியால் வானத்து நட்சத்திரங்களைப் போல பெருகப்பண்ணி அசீர்வதித்தார். உயர்ந்த அறத்தை வாழ்கையில் நடைமுறைப்படுத்தினால் உலகிலுள்ள எல்லாரைக்காட்டிலும் தேவன் நம்மை உயர்வாக வைப்பார் என தெளிவாக திருவாக்குப்புராணம் விளக்குகிறது.

**சான்றோரின் நெறி - விட்டுக்கொடுத்தல்**

சால்பு என்னும் அடிச்சொல்லில் இருந்து பிறந்தது சான்றோர் என்ற வார்த்தை சால்பு என்னும் சொல்லுக்கு மேன்மை, ஊக்கம், ஆக்கம் அறிவு, வீரம், பொறுமை, பொறுப்புடமை எனப்பல அர்த்தங்கள் உண்டு. “சால்பு உடையோர் சான்றோர். விருப்பு வெறுப்பைக் கடந்து நல் ஒழக்கம் உடையவர்களாகச் சமூகத்தில் வாழ்பவர்கள் சான்றோர்கள்”[4]

மூத்தோர் சொல் வார்த்தை அமிழ்தம். பெரியோர்கள் கூறும், அறிவுரைச் சொற்கள் நம்மை அழிவிலிருந்து காப்பாற்றும் அமிழ்தம் போன்றது.

விட்டுகொடுப்பவன் கெட்டுப்போவதில்லை கெட்டுப்போகிறவன் விட்டுக்கொடுப்பதில்லை - என்ற மூத்தோர் சொல்லிற்கு ஏற்ப விட்டுக் கொடுத்து வாழவேண்டும் என்று திருவாக்குப் புராணம் கூறுகிறது.

**வேறுமன்னவ னடியர்கள் தோண்டியே விரிநீர்**
**ஊறுமூற்றினைக் கண்டனர் அத்திரு வுரின்**
**மாறுபட்டிடு மேய்ப்பர்கள் தமதென வகுத்தார்**
**கூறுபேரதற் காதலி னெசேக்கெனக் குறித்தான்**

(ஈசாக்குப் படலம்-33)

ஈசாக்குடைய வேலைக்காரர்கள் வெட்டின துரவை கேராரூர் மேய்ப்பர் தங்களுடையது என்று வாக்குவாதம் செய்தாலும் ஈசாக்கு சண்டைபோடாமல் விட்டுக்கொடுத்ததால் ஆசீர்வதிக்கப்பட்டான்

**அஞ்சல் நின்னது பங்கில்யா னமர்ந்தென தடியான்**
**மிங்கசீர்திக ழாபிரகாமெனு மிகுநன்**
**நெஞ்சி னுத்தம னிமித்தமா சீர்வதித் துன்னை**
**விஞ்ச வுன்குலம் பெருகவும் விளைப்பலென் றுரைத்தான்.**

(ஈசாக்குப் படலம்-37)

விட்டுக்கொடுத்ததன் விளைவு தேவன் ஈசாக்கிற்கு தரிசனமாகி உன் சந்ததியும் உன் சம்பத்தையும் பெருகப்பண்ணுவேன் என்றார். (ஆதி 26-24)5

## உண்மையான உழைப்பு

**“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு”**

கடல் கடந்தாவது வாணிபம் செய்ய வேண்டும்.

**“அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை**
**பொருளில்லாக்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு”[6]**

குறள் -247

அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லாதவர்களுக்கு இவ்வுலகம் இல்லை என்பது வள்ளுவரின் வாக்கு. இவ்வாக்கு ஔவையை வெகுவாக பாதித்திருக்கிறது போலும்! இதன் வெளிப்பாடாக நீ இருக்கும் இடத்தில் பொருள் தேடவழியில்லையென்றால் நாடுவிட்டு நாடு கடந்து போயாவது பொருளை ஈட்டி வா என்கிறார். நாம் இன்றைய நாகரிக உலகில் சுகமாக வாழவேண்டுமென்றால் தேவையானயான செல்வமும் பணமும் இருக்கவேண்டும்.

தேவையை உணர்ந்து வாழ்வில் செயலாற்றினால்தான் ஒரு சிறந்த வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். இதையே வேத புத்தகத்தில் உன் கையின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பேன் என்று தேவன் கூறுகிறார். ஈசாக்கு உழைத்தான் அவரை தேவன் நூறுமடங்கு ஆசீர்வதித்தார். உண்மையாக உழைப்பவனை கடவுள் நிச்சயமாக ஆசீர்வதிப்பார்.

**ஈங்கிதன் ரிப்பெரு நாட்டினி லீசாக்**
**காங்குவித்திடு தொழிலினால் விளைவுநூ றதிகம்**
**ஓங்குமவ்வரு டத்தினி லுற்றனன் கடவுள்**
**பாங்குகொண்டவற் காசியும் புரிந்தனன் பரிவால்**

(ஈசாக்குப் படலம்-27)

## இறைவனைத் தொழுதல்

**“ஆலயம் தொழுவதும் சாலவும் நன்று”**

கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்குவது மிகுந்த நன்மையைத் தரும். ஆலயம் என்பது தெய்வத்தின் இருப்பிடம் மட்டும் இல்லை. அது உடல்ரீதியாகவும் மனரீதியாகவும். மனிதனை கட்டுக்குள் வைக்கும் ஒரு ஆரோக்கியத்தின் பிறப்பிடம். அத்தகைய இடத்திற்கு சென்று ஒரு மணி நேரமாவது அமர்ந்து மனதை ஒருநிலைப் படுத்திக்கொள்வது நன்மைபயக்கும் கோவிலுக்கு செல்வதன் மூலம் நாம் மனநிம்மதியைப் பெறுகிறோம். இதையே வேதாகமம் சபை கூடுதலை விட்டுவிடாதிருங்கள் என்கிறது (எபி-10-25)7 அதுமட்டுமல்லாமல் ஒரு பிரச்சனை வந்துவிட்டால் மனுஷர்களிடம் சொல்லி திரியாமல் தேவனிடம் தெரிவிக்க கற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் பிரச்சனைக்குரிய தீர்வும் மனஅமைதியும் கிடைக்கும் என்று திருவாக்குப்புராணம்

எடுத்துரைக்கிறது. ரெபேக்காள் கருவில் இருசிசுக்கள் ஒன்றையொன்று மோதிக்கொண்டிருத்தலை எண்ணி கவலையுடன் தேவனிடத்தில் விசாரிக்கிறாள்.

***இதமிக்க கருணைசாலு மிறைதிரு வருளாற்றோன்றி***
***உதரத்துட் சிசுக்களொன்றை யொன்றுற நெருக்கும்போழ்தில்***
***மதாமைக்கண் மடமானங்சி வானவற் பணிந்துகேட்க***
***நிதமுற்ற மகிமைபுண்ட நின்மலனுரைக்குமன்றே***
***(ஈசாக்குப் படலம்-4)***

**மன்னித்தல்**

ஒருவர் நம்மை எதிர்த்து செயல்பட்டாலோ பேசினாலோ பலிக்கு பலியாக செயல்படக்கூடாது. மாறாக மன்னிக்க வேண்டும் என்று வேதம் நமக்குகற்றுக்கொடுக்கிறது.திருவாக்குப்புராணத்திலும் ஈசாக்கை எதிர்த்த பெலிஸ்தர் தம்மிடத்தில் வந்து மன்னிப்பு கேட்டபொழுது அவர்களை வெறுமனே அனுப்பாமல் வருந்து வைத்து உபசரித்து வழியனுப்பினான். “மறப்போம் மன்னிப்போம்” எல்லோருடனும் சமாதானத்துடன் வாழவேண்டும் என்பதையே வேதம் போதிக்கிறது.(ஆதி26-30இ31)

***அன்ற வாசகங் கேட்டலு மாபிர காஞ்சேய்***
***துன்று மன்புடன் விருந்திடத் துய்த்தனர் துயின்றார்***
***ஒன்றுவைகலில் மற்றைநா ளாணையிட் டுவந்தார்***
***சென்றுபோயினர் வந்தவர் செல்வனு மிருந்தான்***
***(ஈசாக்குப் படலம்-42)***

**முடிவுரை**

பெற்றோர்க்கு கீழ்படிதல், உயர்ந்த பண்புகளை பின்பற்றுதல் விட்டுக்கொடுத்தல், உழைப்பு, கடவுளை தேடுதல், மன்னிப்பு, பிறர் மீது அன்புகாட்டுதல் போன்ற வாழ்வியல் நெறிகளை திருவாக்குப்புராணம் ஈசாக்குப்படலத்தின் மூலம் கற்றுக்கொடுக்கிறது. இதனைப் பின்பற்றி நல்லதொரு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வோமாக.

**அடிக்குறிப்புகள்**

1. பரிசுத்த வேதாகமம் - எபேசியர் 6-1
2. மேலது. - நீதிமொழிகள் 10-1
3. மேலது -ஆதியாகமம் 26-4இ5
4. இரா.தெய்வம் ஔவையார் பாடல்கள் பிற்காலம். ப.7
5. பரிசுத்த வேதாகமம் - ஆதியாகமம் 26-24
6. திருக்குறள் -247
7. பரிசுத்த வேதாகமம் - எபிரேயர் -10-25